ஶ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

4-ஆம் திருமொழி-மாணிக்கங்கட்டி

_______*_______

மாணிக்கம்கட்டி வயிரம்இடைகட்டி *
ஆணிப்பொன்னால்செய்த வண்ணச்சிறுத்தொட்டில் *
பேணிஉனக்குப் பிரமன்விடுதந்தான் *
மாணிக்குறளனே!தாலேலோ வையமளந்தானே! தாலேலோ. (1)

உடையார்கனமணியோடு ஒண்மாதுளம்பூ *
இடைவிரவிக்கோத்த எழில்தெழ்கினோடு *
விடையேறுகாபாலி ஈசன்விடுதந்தான் *
உடையாய்! அழேல் அழேல்தாலேலோ உலகமளந்தானே தாலேலோ. (2)

என்தம்பிரானார் எழில்திருமார்வர்க்கு *
சந்தமழகிய தாமரைத்தாளர்க்கு *
இந்திரன்தானும் எழிலுடைக்கிண்கிணி *
தந்துஉவனாய்நின்றான்தாலேலோ தாமரைக்கண்ணனே! தாலேலோ. (3)

சங்கின்வலம்புரியும் சேவடிக்கிண்கிணியும் *
அங்கைச்சரிவளையும் நாணும்அரைத்தொடரும் *
அங்கண்விசும்பில் அமரர்கள்போத்தந்தார் *
செங்கண்கருமுகிலே! தாலேலோ தேவகிசிங்கமே! தாலேலோ. (4)

எழிலார்திருமார்வுக்கு ஏற்குமிவையென்று *
அழகிய @ ஐம்படையும் ஆரமும்கொண்டு *
வழுவில்கொடையான் # வயிச்சிரவணன் *
தொழுதுவனாய்நின்றான்தாலேலோ தூமணிவண்ணனே! தாலேலோ. (5)

ஓதக்கடலின் ஒளிமுத்தினாரமும் *
சாதிப்பவளமும் சந்தச்சரிவளையும் *
மாதக்கவென்று வருணன்விடுதந்தான் *
சோதிச்சுடர்முடியாய்! தாலேலோ சுந்தரத்தோளனே! தாலேலோ. (6)

கானார்நறுந்துழாய் கைசெய்தகண்ணியும் *
வானார்செழுஞ்சோலைக் கற்பகத்தின்வாசிகையும் *
தேனார்மலர்மேல் திருமங்கைபோத்தந்தாள் *
கோனே! அழேல்அழேல்தாலேலோ குடந்தைக்கிடந்தானே! தாலேலோ. (7)

கச்சொடுபொற்சுரிகை காம்புகனகவளை *
உச்சிமணிச்சுட்டி ஒண்டாள்நிரைப்பொற்பூ *
அச்சுதனுக்கென்று அவனியாள்போத்தந்தாள் *
நச்சுமுலையுண்டாய்! தாலேலோ நாராயணா! அழேல்தாலேலோ. (8)

மெய்திமுருநானப் பொடியோடுமஞ்சளும் *
செய்யதடங்கண்ணுக்கு அஞ்சனமும்சிந்துரமும் *
வெய்யகலைப்பாகி கொண்டுஉவளாய்நின்றாள் *
ஐயா! அழேல்அழேல்தாலேலோ அரங்கத்தணையானே! தாலேலோ. (9)

* வஞ்சனையால்வந்த பேய்ச்சிமுலையுண்ட *
அஞ்சனவண்ணனை ஆய்ச்சிதாலாட்டிய *
செஞ்சொல்மறையவர்சேர் புதுவைப்பட்டன்சொல் *
எஞ்சாமைவல்லவர்க்கு இல்லைஇடர்தானே. (10)

அடிவரவு: மாணி உடை என் சங்கின் எழில் ஓத கானார் கச்சு மெய் வஞ்சனையால் தன்

@ ஜம்படை -ஶ்ரீபஞ்சாயுதமாகிற ஆபரணம். # வயிச்சிரவணன் என்று பலர்.